# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,016 — 1933 ம் ௵ கார்த்திகை௴ 3 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரை யைப்பற்றிய சட்டம்.

1933 ம் ஆண்டு கதிர்காம கார்த்திகை திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திரசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தினுற் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.

டி. பீ. ஜயத்திலக்க,
சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஆண்டு ஐப்பசி௴ 27 ந் திகதி.

பிரமாணங்கள்.

1. (a) கதிர்காமத்தில் 1933 ம் ஆண்டு கார்த்திகை திருவிழா நடக்கும் நாட்களும் யாத்திரிகர் கதிர்காமத்தில் தங்கக்கூடிய காலமும் 3 நாட்கள் மாத்திரம்தான். அதாவது 1933 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ந் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 2 ந் திகதி முடியும் வரைக்கும்.

(b) முதலாவதாக சொல்லப்பட்ட தேதிக்குமுன்பாக வருகிற அல்லது குறிக்கப்பட்ட காலத்துக்குப்பின் நிற்கிற யாத்திரிகர்களை குற்றவாளியர்களாக காணப்படும்.

2. " யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி " ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டரின் மேல் அதிகாரத்திலும், " பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர்" என்று பெயா கொடுக்கப்பட்ட பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தரின் உடன் அதிகாரப் பார்வையிலும் இருக்கும். பின்னுவதாக சொல்லப்பட்ட உத்தியோகஸ்தருக்கு ஒரு வைத்திய உத்தியோகஸ்தரும் ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தரும் உதவி புரிவார்கள்.

3. கதிர்காமத்தில் திருவிழா நடக்கும் காலத்தில் தொற்று வியாதி உண்டுபடின் பார்வை செய்கிற உத்தியோகஸ்தருக்கு திருவிழாவை நிறுத்தவும் யாத்திரிகர்களை அந்த ஊரை உடனே விட்டு தங்கள் இடங்களுக்கு போகும்படி செய்யவும், இன்ன பாதையாற் போகவேண்டுமென்றும் நியமிக்கவும் தத்துவமுண்டு.

4. பார்வைசெய்யும் உத்தியோகஸ்தருக்கு கதிர்காமத்திலும், போகும் பயணத்திலும், திரும்பிச் செல்லும் பயணத்திலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச்செய்ய அதிகாரமுண்டு :—

(a) யாத்திரிகர்களுக்கு கழுவவும், முழுகவும், தண்ணீ ரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும், மலசலபாதைக்கு போகவும் வேறு வேறு தலங்களை நியமிக்கவும் ;

(b) அந்தந்த வகுப்பைச்சார்ந்த யாத்திரிகர் தங்கியிருக்கும்படி வெவ்வேறு தலங்களை நியமிக்கவும்;

(c) யாத்திரிகர் கூட்டமாக இன்ன பாதையால் செல்லவேண்டுமென்று நியமிக்கவும் ;

(d) யாத்திரிகர்களுக்கு கொடுக்கப்படும் தீன் பகிர்ந்து கொடுத்தலைப்பார்த்து நடத்தவும் ;

(e) நோய்கொள்ளும் யாத்திரிகர்களுக்குத் தங்கியிருக்கும்படி வெவ்வேறே தலத்தை நியமிக்கவும் அவ்வாட்களுடன் வேறொருவரையும் கலவாமலிருக்கும்படிபண்ணவும், அவர்களுக்கு பயணம்போகக் கூடாதுபோனல் நிறுத்திவைத்திருக்கவும்.

இவ்விதமான காரணங்களைக்கொண்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரினுல் கொடுக்கப்படுகிற கட்டளையை எதாவது எவராவது மீறுபவர் குற்றவாளியாக காணப்படுவர்.

5. இந்தப் பிரமாணங்களின்பொருட்டு "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" என்பது பெரிய கோயிலைச்சுற்றி நாலு பக்கமும் அரைக் கட்டை தூரத்துக்குள் உள்ள பாகமென பொருள்படும்.

6. பயணத்தில் அல்லது தங்கியிருக்கு மிடத்தில் சுகத்துக்குப் பழுதானதென்று பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் இல்லாதிருந்தால், பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் காணும் தீன் சாமானெல்லாவற்றையும் பறித்து அழித்துப்போடப் பொலீசார் தத்துவமுடையவராயிருப்பர். இந்தக் கடைமையை அல்லது வேறு எந்தக் கடைமையையும் பொலீசார் செய்யும்போது அவ்விதஞ்செய்யவிடாமல் எவராவது தடைபண்ணுபவர் குற்றவாளியாக காணப்படுவர்.

7. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரிடமிருந்து அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரிட்மிருந்து உத்தரவுச்சீட்டு பெறுமல் மாடுகளை அல்லது வண்டி மாடுகளை தங்கியிருக்குமிடமிருந்து காற் கட்டைக்குட்பட் யாராகுதல் கொண்டுவந்தால் அவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

8. உத்தரவுச்சீட்டுப் பெறுவோர் தங்கியிருக்குமிடத்தில் பார்வை செய்கிற உத்தியோகஸ்தரால் சனங்களின் பொதுச் சுகத்துக்காகவும் சுகாதாரத்துக்காகவும், போக்குவரவுக்கு தகுதியாயும் நியமிக்கப்படும் கட்டளைப் பிரமாணங்களை அனுசரிக்கக் கடைமைப்பட்டவர்களாவார்கள்.

9. (1) (a) எவ்வித சாமான்களையும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் குறித்துவிடும் இடத்திலன்றி வேறெந்த இடத்திலும் விற்க வைத்திருக்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

(b) பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அவர்கள் இல்லாதிருந்தால் பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் சுகத்துக்குப் பழுதான போசனமென்று தீர்க்கும் எப்போசனத்தையும் விற்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

2 (*a*) சகல சாப்பாட்டுக்கடைகளும், தேத்தண்ணீர் கோப்பிக் கடைகளும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் திருப்திக்கு துப்பரவாகவும் சுகாதாரத்துக்கு ஏற்றதாயும் வைத்திருக்க வேண்டும்.

(*b*) மிஞ்சிய தேத்தண்ணீர், கோப்பி அல்லது பால் அல்லது மிச்சமான சாப்பாடு, சமையல்பாக கழிவுகள், அல்லது குப்பை, நிலத்திலே வீசப்படாது. ஆனால் இவைகளை சுகாதார வேலையாட்கள் அப்புறப்படுத்துவதற்காக ஏற்ற ஒரு பாத்திரத்திலே சேர்த்துவைக்க வேண்டும்.

(*c*) சாப்பாட்டுச் சாமான்களை ஈக்கள் மொய்க்கும்படி துறந்து வைக்கப்படாது.

**10.** யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்கு மிடத்தைவிட வேறெந்த விடத்திலும் மலசலங் கழித்தால் அல்லது மலத்தை மண்ணால் மூடாவிட்டால், அல்லது பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரால் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றிலிறங்க அல்லது குளிக்கச் சம்பவித்தால் அப்படிச் செய்தவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

**11.** தொற்று வியாதியால் பீடிக்கப்பட்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு அல்லது வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தருக்கு அது விஷயத்தை அறிவிக்கத் தவறும் எவரும் அல்லது அவ்வியாதி வந்த நோயாளியை ஒளித்து வைப்பதற்கு உதவி செய்யும் அல்லது தூண்டிவிடும் எவரும் குற்றமுடையவராக எண்ணப்படுவார்.

**12.** சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் பார்வை செய்கிற உத்தியோகஸ்தர் அல்லது பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் நியமிக்கு மிடத்தில் விடுதிவிட வேண்டும். அப்படிச்செய்ய மறுக்கும் அல்லது செய்யாது விட்டுவிடும் எவரும் குற்றமுடையவராகக் கொள்ளப்படுவர்.

**13.** பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் உத்தரவை முன்னதாக பெற்றுக்கொள்ளாமல் கதிர்காமத்தில் பெரிய தெருக்களுக்குச் சேர்ந்த இடத்தை பிடிக்கக்கூடியதாக யாராவது ஒரு கொட்டிலைக் கட்டினாலும், அல்லது ஒரு கட்டிடத்தை பெருப்பித்துக் கட்டினாலும் குற்றமுடையவராகக் காணப்படுவார்.

---

## காணி விற்பனவு.

**Jaffna No. 54**—1933 ம் ஆண்டு மார்கழிமீ 18 ந் திகதி, திங்கட்கிழமை தன் ஆபிசில் வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசண்டவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகள், அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்த்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும்.

26 காணித்துண்டுகள், வட மாகாணத்து தீவு, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கரச்சி, வடமராட்சி, பூநகரிப் பகுதிகளிலிருக்கின்றன.

தீவுப்பிரிவு.

பிளான் இலக்கம் A 33?. குறிச்சி—புங்குடுதீவு. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாக்கொண்டைஅருகு .. | — .. | தரவை, குறுக்கு றோட்டுக்கு சேமிக்கப் பட்ட நிலம் | 0 | 0 | 9 | —* |
| 2 | ஷை .. | க. நாகநாதி .. | தரவை .. .. | 1 | 1 | 12 | 35 |
| 3 | ஷை .. | — .. | தரவை, கிராம றோட்டுக்கு சேமிக்கப் பட்ட நிலம் | 0 | 0 | 18 | —* |

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கரச்சி.

பிளான் இலக்கம் 5,472. குறிச்சி—குஞ்சுபரந்தன். உரித்தாளி—முடி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | கொல்லன்ஆறு வயல்காடு அல்லது சங்கரவயல் விலைமருதலடை | — .. | காடு .. .. | 1 | 3 | 36 | 20 |
| 5A | கொல்லன்ஆறுவயல் .. | வி. வல்லிபுரம் .. | காடு .. .. | 1 | 2 | 10 | 20 |

பிளான் இலக்கம் A 230. குறிச்சி—கரம்பகம். உரித்தாளி—முடி, கரம்பகம் கதிராமர் முருகர், கதிராமர் பெண் செல்லாத்தை இவர்களால் கூட்டிபிடித்த நிலம், தீர்த்து கொடுக்கப்படும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீரைகள் அல்லது பான்டியன்தோட்டம் | — .. | 20–25 வயதுள்ள தென்னந்தோட்டம் | 4 | 2 | 29 | 584† (முழுக் காணிக்கும் |
| 2 | வீரைகல் .. | — | தென்னந்தோட்டம் .. | 0 | 0 | 10 | 90† |

உரித்தாளி—முடி, கரம்பகம் (1) வி. போன்னையா, (2) க. சின்னத்தம்பி, (3) சின்னத்தம்பி பெண் முத்துப்பிள்ளை, (4) நா. செல்லையாவால் கூட்டிப்பிடித்த நிலம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | ஷை .. | — .. | சிறு காடும் 20–25 வயதுள்ள தென்னையும் | 1 | 1 | 8 | 41† (முழுக் காணிக்கும்) |

பிளான் இலக்கம் T. S. P. P. 34. குறிச்சி—கிளிநொச்சி. உரித்தாளி—தீர்த்து கொடுக்கப்படும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4S | கிளிநொச்சிகாடு .. | கே. சின்னையா .. | — .. | 1 | 1 | 39 | 30† |
| 4W | ஷை .. | எஸ். இளையதம்பி .. | — .. | 0 | 1 | 18 | 30† |

பிளான் இலக்கம் I. S. P. P. 5. குறிச்சி—முரசமோட்டை. உரித்தாளி—தீர்த்து கொடுக்கப்படும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 45N | முரசமோட்டைகாடு .. | ஶ்ரீ. சிந்தாமணியவர்கள் | — .. | 21 | 0 | 4 | 25† |

வடமராட்சி.

பிளான் இலக்கம் A 255 குறிச்சி—கரணவாய் தெற்கு. உரித்தாளி—முடி, க. வாரியால் கூட்டிப்பிடித்த நிலம் தீர்த்து கொடுக்கப்படும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பூவரசம்பிட்டி .. | க. வாரி .. | புகையிலையும் தென்னந்தோட்டமும் .. | 0 | 1 | 12 | 25† |

உரித்தாளி—முடி, க. வாரி தீர்த்து கொடுக்கப்படும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | ஷை .. | க. வாரி .. | தரவை .. .. | 0 | 2 | 30 | 20† |

பிளான் இலக்கம் A 257. குறிச்சி—வருத்தலை. உரித்தாளி—முடி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆனைவிழுந்தான் .. | — .. | பாதைக்காக விடப்பட்ட நிலம் .. | 0 | 1 | 4 | —* |
| 2 | ஷை .. | — .. | வண்டில்பாதை .. .. | 0 | 0 | 23 | —* |

உரித்தாளி—இல்லை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | ஷை .. | அ. ச. கந்தையா .. | தரவை .. .. | 2 | 3 | 23 | 20 |

பிளான் இலக்கம் A 319. குறிச்சி—மருதங்கேணி. உரித்தாளி—இல்லை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடல்க்கரைமணல் அல்லது மணல்காடு | ச. முத்தையா. .. | தரவை .. .. | 1 | 3 | 39 | 20 |

பிளான் இலக்கம் A 360. குறிச்சி—உடுத்துறை. உரித்தாளி—இல்லை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நாவல்காடு .. | வி. சுப்பையா .. | 4 பனைகள் உள்ள நிலம் .. | 0 | 1 | 18 | 22 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் A 330. குறிச்சி—குடத்தனை. உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 1 | தாழையடி நிலம் .. | ம. சிதம்பரப்பிள்ளை .. .. | தரவை .. .. | 3 | 0 | 7 | 35 |
| | பிளான் இலக்கம் A 399. குறிச்சி—நாகர்கோயில். உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 1 | மணல்காடு .. | — .. | வண்டில் பாதைக்காக விடபட்ட நிலம் | 0 | 0 | 13 | —* |
| 2 | நாவல்காடு அல்லது மணல்காடு | வீ. சின்னத்தம்பி . | புதுக்க வெட்டிய நிலமும் தோட்டமும் | 0 | 3 | 4 | 20† |
| | உரித்தாளி—முடி. | | | | | | |
| 3 | ஷை .. | — .. | சிறுகாடு .. .. | 0 | 1 | 25 | 20 |
| | உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 4 | ஷை .. | வி. கந்தன் .. | ஒரு கொட்டில் உள்ள தரவை .. | 0 | 2 | 8 | 20† |
| | பிளான் இலக்கம் A 400. குறிச்சி—நாகர்கோயில். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | மணல்காடு .. | அ. வேலுபிள்ளை. .. | ஒரு கொட்டில் உள்ள தரவை .. | 1 | 0 | 3 | 20† |
| | பிளான் இலக்கம் A 401. குறிச்சி—நாகர்கோவில். உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | மவல்காடு அல்லது மணல் காடு | க. வல்லிபுரம் .. | ஒரு கொட்டில் உள்ள தரவை | 0 | 3 | 39 | 20 |
| | பூனகரி. | | | | | | |
| | பிளான் இலக்கம் A 332. குறிச்சி—பொன்னுவெளி. உரித்தாளி—முடி. | | | | | | |
| 1 | மரமோட்டைகாடு .. | ச. சண்முகம் .. | வெட்டப்பட்ட நிலமும் 6 மாத தென்னையும் | 2 | 0 | 13 | 20 |

* விற்பனவுக்கு அல்ல. † தீர்த்து கொடுக்கப்படும்.

இக்காணிகளின் மறு விபரங்கள் வடமாகாண அரசாட்சி ஏசண்டரிடமிருந்தும், படங்கள் அளவு கந்தோர் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஆண்டு ஐப்பசிமீ 31 ந் திகதி.

ஆர். எம். எம். வூர்ஸ்லி,
எக்றிங் காணிக் கொம்மிஷனர்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெற்றியகெதற பெண் படசாலைக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல A 168. குறிச்சி—பெற்றியகெதற.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | சியம்பலககவத்த | தென்னங்காணி, 6 தென்னையும், 1 பலாவும், 3 கயுமரமுள்ளது | அமரசிங்க களு ஆராச்சிகே சான்ஸ் பெறிரு, பண்டாரவத்த | 0 | 2 | 10·7 |
| 2 | ஷை .. | தென்னங்காணி, 3 தென்னையும் 2 பலாவுமுள்ளது | எம். ஈ. டொன் ஜிறிக்கோறிஸ், பிற்றியகெதற | 0 | 0 | 6·3 |
| 3 | ஷை .. | தென்னங்காணி, 24 தென்னையும் 1 பலாவுமுள்ளது | முனசிங்க எமியாகே டொன் பௌலிஸ் அப்புகாமி, பிற்றியகெதற | 0 | 1 | 33·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஹு கார்த்திகை மாசம் 28 ந் தேதியிலன்று பகல் 12 மணிக்கு இந்த கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஹு ஐப்பசிமீ 28 ந் திகதி.

ஆர். எஸ். வீ. பூலியர்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கொழும்பு.

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொறுக்கமுவ கலவன் பாடசாலைக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிறதமபடத்து இல. A 169 குறிச்சி—பொறுக்கமுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அம்பககவத்த .. | தோட்டம், 48 தென்னையும், 7 பலாவும், 18 கமுகுவும் 2 சிலைக்காத கட்டிடமும் (பாடசாலையும் கடையும்) | விஜயசிங்க அச்சிகே பிறம்பி அப்புகாமியும் விஜயசிங்க அச்சிகே வெலுன் அப்புகாமி | 0 | 3 | 11·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹு கார்த்திகைமீ 28 ந் தேதியிலன்று 11 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஹு ஐப்பசிமீ 28 ந் வ.

ஆர். எஸ். வீ. பூலியர்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கொழும்பு.

1876 ம் ஷ்ரு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் 19,909 ம் இலக்கப் பிரதமபடத்தில் ஒரு ரேட்டுக்கு பாதை விடும்படிக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 19,909. குறிச்சி—இலிம்பை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | இலிம்பைத் தென்னந் தோட்டம் | 19 வயதான ஒரு பலாவும், 14–24 வயதான 11 தென்னமரங்களும் உள்ள ஓர் தென்னந்தோட்டத்தின் அரைவாசி | கனம் ஏ. சி. சொயிசா | .. 0 1 28 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷ்ரு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஷ்ரு (நொவெம்பர்) கார்த்திகை மாசம் 27 ந் தேதியிலன்று முற்பகல் 9·30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1933 ம் ஷ்ரு ஐப்பசிமீ 27 ந் டை.

பீ. சரவணமுத்து,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ஷ்ரு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கூறகொல்லேயாய வாய்க்கால் பாவினை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும்காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 62. குறிச்சி—கூறகொல்லேயாய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | களவிற்றசேனவத்த | .. தோட்டம் | .. மிஸ்ரர் என். ஏ. ஜோன் பெரேரா, உடஸ்கிரியா | .. 0 0 26·5 |
| 2 | முற்றேபேவசேன | .. சேனை | .. சற்கொருளே விடானேகெதர அப்பின் காடர்லெப்பே, மொகமெட் அலி, சேகுமீராலெப்பே, நிக்காகொள்ள | 0 0 35·7 |

எடுத்துககொள்வதறகான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷ்ரு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏறபாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஷ்ரு கார்த்திகை மாசம் 27 ந் தேதியிலன்று 10 மணிக்கு காலையில் மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1933 ம் ஷ்ரு கார்த்திகைமீ 26 ந் டை.

டபிள்யு. ஓ. ஸ்டீவன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தளை.

---

1876 ம் ஷ்ரு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணம், பாத்துறை டிஸ்திறிக் கந்தபடபததுவில் மாக்கந்தூறவில் ஓர் ஆஸ்பத்திரி (மருந்துச் சாய்ப்பு) கட்டிடத்திற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

91 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்து 6 ம் இலக்கப் பின்துண்டு. குறிச்சி—பெறகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 263A | வங்கமுளகேஅளுத்வத்தை அல்லது கறனங்கக டெனியேவத்தை | இரண்டு கட்டிடமுள்ள தோட்டம் (ஒரு மருந்துச் சாய்ப்பும் ஒரு கக்கூசும்) | மாத்துறையில் காலஞ்சென்ற மிஸ்டர் எல். என். டி. சில்வாவின் உரிமைக்காரர் | 0 0 30 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷ்ரு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஷ்ரு டிசம்பர் மாசம் 14 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறை கச்சேரி,
1933 ம் ஷ்ரு ஒக்டோபர்மீ 28 ந் டை.

எஸ். எச். வாடியா,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஷ்ரு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஆசாரிய வெவவின் நீரினுல் மூடப்படுகிற படியால் மூடப்படும் நிலத்தையும் குளத்தோடு சேர்த்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

கிராமபடத்து இல. 384. குறிச்சி—மீகஹவெவ.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 2R | மீகஹவெவவெல | .. செய்கைபண்ணுமல் விடப்பட்ட வயல் | கல்கெதர முதியான்செலாகே றங்கிராதே வெதாவும் அப்புகே நம்பினுல் வெல்விதானையும் மீகஸ்வேகம | 3 2 25 |